பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 11 ஞாயிற்றுக்கிழமை (27-09-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 304

## பூநகரியில் தாக்குதல் தொடர்கிறது:

# ஆலடியில் நேற்று அதிகாலை ராணுவம் மீது புலிகள் அதிரடி!

## கடற்பரப்பில் நீண்டதூரம் தாக்கும் கனரக இயந்திரத் துப்பாக்கி அழிப்பு

யாழ்ப்பாணம், செப்டம்பர் 27

பூநகரிப் பகுதியில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடவடிக்கைகள் நேற்று இரண்டாவது நாளாகத் தொடர்ந்தன.

நேற்று அதிகாலை ஆலடிப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஐந்துக்கும் அதிக இராணுவத்தினர் உயிரிழந்தனர்; கடற்பரப்பில் எட்டுக் கிலோ மீற்றர் தூரத்துக்குக் குறி தவறாது தாக்குதல் நடத்தக்கூடிய — சீனத் தயாரிப்பு — கனரக இயந்திரத் துப்பாக்கி ஒன்றையும் விடுதலைப் புலிகள் இத்தாக்குதலின் போது கைப்பற்றி அழித்தனர்.

பூநகரி — பள்ளிக்குடா முன்தினம் அதிகாலை பளவில் ஆலடிப் பகுதியில் இராணுவ முகாமின் காவல் தகர்த்த விடுதலைப் புலிகள், உள்ள படையினரின் காவல் அரண்கள் பலவற்றை நேற்று நேற்று அதிகாலை 1-30 மணி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பூநகரியில் கண்ணி வெடி!

# ராணுவத் தளபதி சிசில், ஜெரி மயிரிழையில் உயிர் தப்பினர்!

### டிரக் சிதறியது; கப்டன், 7 படையினர் பலி

கொழும்பு, செப். 27

பூநகரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கண்ணி வெடித் தாக்குதலில் ஸ்ரீலங்கா இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிசில் வைத்தியரத்ன, வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி டி. சில்வா ஆகியோர் மயிரிழையில் உயிர் தப்பினர்.

ஸ்ரீலங்கா இராணுவ வட்டாரங்கள் இச்செய்தியை ஊர்ஜிதம் செய்தன.

இரு தளபதிகளும் நின்ற இடத்துக்கு ஒரு சில யார் தூரத்தில் புலிகளின் கண்ணி வெடித்ததாகவும் —

அதனால் டிரக் ஒன்று சிக்கிச் சிதறியதாகவும் —

ஒரு கப்டன் மற்றும் ஏழு இராணுவத்தினர் உயிரிழந்ததாகவும் — ஸ்ரீலங்கா இராணுவத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

(உ-ஒ-5)

# திலீபன் எழுச்சிநாளில்நேற்று உத்வேக உணர்வுடன் மக்கள்

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாள் நேற்றுக் குடாநாடெங்கும் எழுச்சியுடனும், உத்வேகத்துடனும், உணர்வு பூர்வமாகவும் கொண்டாடப்பட்டது.

மூன்று பிரதான இடங்களிலும் நடைபெற்ற உண்ணா விரதத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் பங்கு பற்றினர். கடந்த பதினொரு நாட்களாக நடைபெற்ற நினைவு நிகழ்வுகளுக்குச் சிகரம் வைப்பது போல நேற்றைய நிகழ்ச்சிகள் அமைந்தன.

நல்லூரில் நடந்த உண்ணா விரத நிகழ்ச்சியில் மக்கள் ஆயிரம் ஆயிரமாகக் கலந்து கொண்டனர். நல்லூர் ஆலயத்தின் வடக்கு, கிழக்கு வீதிகளில் காலையிலேயே மக்கள் கூட்டம் அலை மோதத் தொடங்கியது.

காலை ஏழுமணியளவில் தியாகி திலீபனின் தந்தையாரான திரு. நா. இராசையா ஈகைச் சுடரை ஏற்றி வைத்தார். வலிகாமம் பகுதி தன

[6 ஆம் பக்கம் பார்க்க]

# ஆசைவார்த்தைகள் காட்டி புலிகளை ஏமாற்ற முடியாது

### பிரமுகர் பாலகுமாரன் உரை

யாழ்ப்பாணம், செப். 27

''எம்மைப் பொறுத்தவரையில் நாம் தெளிவாக இருக்கிறோம்: பேச்சுவார்த்தை மூலமாகவோ, அல்லது வேறு எந்த வகையிலோ எம்மை நசுக்கி விடமுடியாது; ஆசை காட்டி எம்மை ஏமாற்றவும் முடியாது.

— இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு: வே. பாலகுமாரன்.

நல்லூரில் நேற்று மாலை நடந்த தியாகி திலீபனின் நினைவுக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது!

சிங்கள அரசுகள் காலத்துக்குக்காலம் பதவிக்கு வருவதற்காக தமிழ் தேசிய இனத்தை நாடி, சில உரிமைகளைக் காட்டி தமது வெற்றியை உறுதி செய்து வந்துள்ளன. தேர்தல் முடிந்ததும் தோல்வி அடையும் கட்சி தமிழ் மக்

[6 ஆம் பக்கம் பார்க்க]

# அம்பாறையில் இராணுவத்தினரின் அணிவகுப்பில் குண்டு வெடிப்பு!

### 4 சிப்பாய்கள், 21 சிறுவர்கள் காயம்

மணிலா, செப். 27

அம்பாறையில் உள்ள இராணுவப் பயிற்சி முகாம் ஒன்றில் குண்டு வெடித்ததில் 4 சிப்பாய்கள், 21 சிறுவர்கள் உட்பட 26 பேர் காயமடைந்தனர்.

தூர கிழக்கு ஒலிபரப்புக் கழகம் நேற்றிரவு இச்செய்தியை வெளியிட்டது.

படையினரின் ஒரு குழுவின் பயிற்சி முடிவு அணிவகுப்பு வைபவத்தின்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அணிவகுப்பு வைபவத்தின் போது மூன்று [illegible] கள் வெடிக்க வைக்கப்பட்டதாகவும்—

ஆனால் தவறுதலாக உண்மையான குண்டு ஒன்றும் அந்த மூன்று குண்டுகளில் இடம்பெற்று விட்டதால், அது வெடித்தபோது அந்த வைபவத்தைப் பார்க்க வந்த [illegible] அறிவிக்கப்பட்டது.

## 2 வேங்கைகள் வீரமரணம்

பூநகரி ஆலடிப் பகுதியில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலின் போது இரண்டு வேங்கைகள் வீரமரணமடைந்தனர்.

லெப்டினன்ட் கலையன்பன் (இராமையா தியாகராஜக்குருக்கள்— நெல்லண்டை, தம்பனை, பருத்தித்துறை), லெப்டினன்ட் முதவழுதி (ஆறுமுகம் கோணேஸ்வரம், கோவில் புளியங்குளம், வவுனியா) ஆகிய இருவருமே வீரமரணமடைந்தவர்களாவர்.

(உ-5-165)

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம்

யாழ்ப்பாணம், செப். 27

பூநகரி ஆலடிப் பகுதியில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ | ஆர். பி. ஜி | — 01 |
| ★ | அதற்குரிய ஷெல்கள் | — 05 |
| ★ | புறொப்லர்கள் | — 05 |
| ★ | 203 பிஸ்டல் ரக துப்பாக்கி | — 01 |
| ★ | அதற்குரிய ஷெல்கள் | — 25 |
| ★ | ரி 56 துப்பாக்கி | — 02 |
| ★ | அவற்றுக்குரிய மகஸின்கள் | — 10 |
| ★ | ரி 81 ரகத் துப்பாக்கி | — 01 |
| ★ | அதற்குரிய மகஸின்கள் | — 03 |
| ★ | ஜி. 3 ரகத் துப்பாக்கி மகஸின்கள் | — 06 |
| ★ | ஜே. ஆர் கிரனேட் | — 35 |
| ★ | பரா வெளிச்சக் குண்டு | — 10 |
| ★ | நடுத்தர ரவைகள் | — 6,394 |
| ★ | நெட்டோ ரவைகள் | — 79 |

[2 ஆம் பக்கம் பார்க்க]

## விமான, ஹெலித் தாக்குதல்

யாழ்ப்பாணம், செப். 27

பூநகரி ஆலடிப் பகுதியில் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல்களை அடுத்து அப்பகுதியிலும் மற்றும் ஆனையிறவுப் பகுதியிலும் விமானக் குண்டு வீச்சுக்கள் இடம்பெற்றதாக அறிவந்தது. ஹெலி ஒன்று பரவலாகத் தாக்குதல் நடத்தியது.

பூநகரி, ஆனையிறவு முகாம்களிலிருந்து ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களும் கடுமையாக நடத்தப்பட்டன.

கடற்பகுதியில் இருந்தும் கடும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

விமானக் குண்டு வீச்சு மற்றும் ஷெல், பீரங்கித் தாக்குதல்களின் சத்தம் சாவகச்சேரி வரை கேட்டன.

இதேசமயம்—

நேற்று அதிகாலை ஹெலி ஒன்று பலாலிக்கும் பூநகரிக்கும் இடையில் அடிக்கடி பறந்து திரிந்தது.

(உ-3-15-17)

## பூநகரியில் களப்பலியான வேங்கைகளுக்கு அஞ்சலி

பூநகரிக் களத்தில் வீரமரணமடைந்த மன்னார் மாவட்ட விசேட தளபதி லெப்டினன்ட் கேணல் சுபனின் (வினாசித்தம்பி சுந்தரலிங்கம் — மன்னார்) புகழுடல் நேற்று குடாநாட்டின் பல இடங்களிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

லெப்.கேணல் சுபனின் புகழுடல் மற்றும் லெப். தமிழேஸ்வரன், இரண்டாம் லெப். சுருளி ஆகியோரது புகழுடல்கள் யாழ் நகரப் பகுதிகளில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட போது, வீதி மருங்குகளில் பொதுமக்கள் கூடி நின்று மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

புகழுடல்கள் வடமராட்சி, தென்மராட்சியிலும் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. மாலிசந்தியில் நேற்று மாலை புகழுடல்களுக்கு திரளான மக்கள் தமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தினர்.

பின்னர் லெப்: கேணல் சுபனின் புகழுடல் மன்னாருக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

(ஓ-5-165-143-111-17-15-51)

## பாட்டாளி மக்கள் கட்சியின் மற்றொரு தலைவரும் கைது

சென்னை, செப். 27

பாட்டாளி மக்கள் கட்சியின் மற்றொரு தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி நேற்று சென்னையில் வைத்து கைது செய்யப்பட்டார்.

நெடுமாறன் மற்றும் டாக்டர் ராமதாஸ், பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் போன்று இவர் மீதும் தேசவிரோத, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

(உ-10)

நீரைத் தேக்கி நிலத்தை வளம் செய்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் ஆறுமுகம் வீரசிங்கம்
(எழுதுமட்டுவாள்)

மலர்வு: 10 — 07 — 1914
உதிர்வு: 27 — 09 — 1987

ஆண்டு ஐந்து ஓடி விட்டாலும்
ஆறாது எம் துயரமது
நீங்காது உம் நினைவு - என்றும்
நிலைத்திட்டீர் எம் மனதில்

உங்கள் நினைவுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

'முருக வாசா',
சரசாலை மத்தி, சாவகச்சேரி. (22666)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

வையத்தில்: 14 — 08 — 1932
ooo
வானுலகில்: 28 — 08 — 1992



### திருமதி நேசரட்ணம் சுப்பிரமணியம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து கண்ணை இமை காப்பது போல காலமெல்லாம் எமை காத்து வந்த பாசத்தின் ஊற்றே! தேசத்தின் உறைவிடமே! பார் போற்ற எம்மை ஆளாக்கி விட்ட எம் இதய தெய்வமே! தங்கள் கனவுகள் நிஜமாகும் வேளையிலே, கணப்பொழுதில் எமையெல்லாம் நீங்காத் துயரில் ஆழ்த்தி இறையடி சேர்ந்து விட்டீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

எமக்குற்ற துன்ப நிகழ்வின் போது சகல வகையிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் எல்லோருக்கும் எம் உளங்கனிந்த நன்றிகள்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளை.

ஸ்ரீ விக்னேஸ்வரா களஞ்சியம்,
148, சண்டி வீதி,
சாவகச்சேரி.

சந்திரசத்தை,
காரைநகர்.
(22665)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
### குழந்தைவேலு சபாரத்தினம்
(ஓய்வு பெற்ற அதிபர்)

தோற்றம்: 03 — 05 — 1916
மறைவு: 30 — 09 — 1989
திதி: 27 — 09 — 1992

வாழ்விற்கு வழிகாட்டி
வாழவைத்த எம் தெய்வமே!
வேதனையில் எமை தவிக்கவிட்டு
விரைந்தீர்கள் விண்ணுலகம்
பாசவலையினை பக்குவமாக நெய்தீர்கள்,
பரந்தாமன் பாதநிழலை பறந்தோடிச் சென்றீர்கள்,
எத்தனை ஜென்மம் நீங்கள் எடுத்தாலும்
அத்தனையிலும் நீளும் எம் நினைவலைகள்.

உங்கள் பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (5348)

## 100 ஜே.வி. பியினர் விடுதலை!

கொழும்பு, செப். 27

தெற்கில் புனர்வாழ்வு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜே.வி.பி. சந்தேக நபர்களில் 100 பேர் கடந்த புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டனர்.

கொழும்பு நாலந்தாக் கல்லூரியில் நடைபெற்ற வைபவமொன்றில் வைத்து இவர்கள், அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ம)

## ஓய்வூதிய வவுச்சர்

யாழ்ப்பாணம், செப். 27

இம்முறை வந்த குமணக் கப்பலில் உள்ளூராட்சி ஊழியர்களுக்கான ஓய்வூதிய வவுச்சர்கள் எடுத்து வரப்படவில்லை என்று அறிவிக்கப்படுகிறது. (த-126)

## கலை, வர்த்தக கல்லூரி
### C. C. A.

**A/L – 93**
**Day Classes**

**பிரிவு - II**

பொருளியல் —
திரு. உதயன்
கணக்கியல் —
திரு ஸ்ரீ
வர்த்தகம் —
பிரபல ஆசிரியர்
அளவையியல் —
திரு. சயந்தன்
இந்து நாகரிகம்
திரு: ஜோதீஸ்வரன்

குறிப்பு:
1. வாரத்தில் நான்கு நாட்களும் வகுப்பு நடைபெறும்.
2. எல்லா அலகுகளுக்கும் ஒரே கட்டணம் அறவிடப்படும்.

பிரிவு I அனுமதிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன

பிரிவு - II
ஆரம்பம்: 29-09-1992

முன்கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும். நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறலாம்.

- நிர்வாகி.

(சி-3517)

## பாரதிதாசன் கல்வி நிறுவனம்
(BECON)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**A/L 93**
**DAY CLASSES**
**A/L 92 Aug.**

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான
மீட்டல் - வினா விடைப் பயிற்சி வகுப்புகள்

பொருளியல் —
எஸ். வரதராஜன்
கணக்கியல் —
சௌந்தி
வர்த்தகம் — பசில்
அளவையியல் —
சோதி
தமிழ்
இந்து நாகரிகம் } —
அமரசிவம்

ஆரம்பம்:
**01-10-1992**
வியாழன் காலை
8-00 மணி

★ ஒரு முறையேனும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

★ பரீட்சைகளை உள்ளடக்கிய வினா-விடைப் பயிற்சிகளாக வகுப்புகள் நடைபெறும்.

(சி-3525)

## கைப்பற்றப்பட்ட.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

★ 14.5 மி.மி ரவைகள் — 2,689
★ 14.5 மி.மி லிங் — 703
★ ஏ. கே. கோசர் — 03
★ இராணுவத் தொப்பி — 02
★ கடற்படைத் தொப்பி — 02
★ மழைக் கவசம் — 01
★ சப்பாத்து — 02 சோடி

(உ-5-165)

## ஈராண்டு நினைவு நாள்

தோற்றம்: 23 — 07 — 1972



மறைவு: 20 — 09 — 1990

தென்புலோலியூர்
செல்வி
### யோகதர்சினி சிவசுப்பிரமணியம்
திதி: 27 — 09 — 1992

உறவாடும் சோகத்தில் உள்ளம் கரைந்தது
நிழலாடும் நினைவில் ஈராண்டு கழிந்தது
தேன்சிந்தும் மலர்க்கொடி நீ தென்றலாகி
தெவிட்டாத நினைவு தந்து வாழு மெங்கள்
ஊன் சிந்தும் உடல் உருக உயிர்கலந்தே
உறவோடு வாழ்கின்றாய் உன்தன் கோலம்
மான்சிந்தும் விழியழகே மயங்கி நிற்க
மஞ்ஞையதன் எழிலுருவை விஞ்சி நிற்க
வான்சிந்தும் பெருமழையின் பயனாய் வாழ்ந்த
வண்ணமகள் உன் நினைவில் நாட்கள் ஓடி
கண்களிலே நீர் பனிக்கக் கலங்கி நிற்கும்
காலமது ஈராண்டாய்க் கழிந்து போக
பண்நிகர் நின் மணிமொழியும் புன்சிரிப்பும்
பகலவனின் பொன்வதனப் பொலிவும் எங்கள்
கண்களிலே நிழலாட ஆவி சோரக்
காண்டரிய நின்காட்சி காண ஏங்கி
விண்ணகத்தே நின் வாழ்வு சிறக்க வென்றே
வேண்டுவம் யாம்!
திருமாலின் செம் பொற்றாளே!

உன் பிரிவால் வாடும்:
அம்மா, அப்பா, தங்கை பிரியதர்சினி,
தங்கை சிவதர்சினி, தம்பி சஞ்சீவன்,
மற்றும் உற்றார், உறவினர்.

(சி-3413)

## 21ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி
### மாரிமுத்து கைலாசபிள்ளை

மலர்வு: 02 — 08 — 1906
உதிர்வு: 07 — 09 — 1992

எமக்கு
உயிர் தந்தாய், உதிரம் தந்தாய்
உயர்வான வாழ்வு தந்தாய்
என்றும் உன்னை மறவாதிருக்க
உள்ளம் நிறைந்த பாசம் தந்தாய்

உங்கள் நினைவில் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

நாளை 28-09-1992 (திங்கட்கிழமை) நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

'கயிலை',
அம்மன் வீதி, பத்திரகாளி கோவிலடி,
திருநெல்வேலி. (22684)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருத்தித்துறை - திருமலை கப்பல் சேவை

# பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதில் சிக்கல்

## தாமதத்திற்கு இதுவே காரணம்

யாழ்ப்பாணம், செப். 27

பயணிகளுக்கு திருமலையிலிருந்து ஹபரணை வரை பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக எழுந்துள்ள சிக்கல் காரணமாகவே பருத்தித்துறை திருமலை பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பதில் தாமதமேற்பட்டுள்ளது.

யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இவ்வாறு தெரிவித்தார்.

இக்கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சு வழங்கிவிட்டதென்றும் ஆனால் கப்பலில் செல்லும் கொழும்புப் பயணிகளுக்கு திருமலையிலிருந்து ஹபரணை வரை பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து கொடுப்பதிலேயே சிரமங்கள் எதிர்நோக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

திருமலையிலிருந்து — ஹபரணை வரையிலான பயணிகளின் பாதுகாப்பு ஏற்பாடுகளை பொறுப்பேற்கும்படி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் கேட்கப்பட்டுள்ளதாகவும் அதற்கு அவர்கள் ஜெனிவாவிலுள்ள தலைமை அலுவலகத்தின் அனுமதியை எதிர்பார்த்திருப்பதாகவும் யாழ் அரச அதிபர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை —

பருத்தித்துறை — திருமலை பயணிகள் கப்பல் சேவையை நடத்துவதற்கு கொழும்பிலுள்ள தமிழ் மூவர் நிலையங்கள் சில முன்வந்துள்ளன. அதற்குரிய ஒரு வழிக் கட்டணம் 1,000 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது

(த-ம-162)

## கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு 'ஒக்ஸ்பாம்' நிறுவனம் உதவி

முறிகண்டி, செப். 27

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் பல உதவிகளை அரச சார்பற்ற நிறுவனமான ''ஒக்ஸ்பாம்'' வழங்கியுள்ளது

வைத்தியசாலைக்குத் தேவையான மெத்தைகள், மெத்தை விரிப்புகள் போன்றவற்றை வழங்கியுள்ளமேற்படி நிறுவனம், பல மாதங்களாக பழுதடைந்த நிலையில் இருந்த அம்புலன்ஸ் வண்டிக்கு தேவையான உதிரிப் பாகங்களையும் வழங்கியுள்ளது.

வைத்தியசாலையின் தண்ணீர்த் தட்டுப்பாட்டைப் போக்க செயற்படாமல் இருந்த குழாய்க் கிணற்றை புனரமைத்துக் கொடுத்துள்ள இந் நிறுவனம்.

மற்றுமொரு குழாய்க் கிணற்றை அமைக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது.

(த-ம-97)

## நுண்கலைப்பீடம் இனிமேல் சான்றிதழ்களுக்குப் பதிலாக பட்டங்களை வழங்கும்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ். பல்கலைக்கழகத்தின் மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைப் பீடத்தில் கல்வி கற்று சித்தியடைந்தவர்களுக்கு இனிமேல் சான்றிதழ்களுக்குப் பதிலாகப் பட்டங்கள் வழங்கப்படும். இதற்கான அனுமதியை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு வழங்கியுள்ளது.

இது வரை காலமும் சங்கீத, நடனத் துறைகளுக்கு டிப்ளோமா கலைமாணி சான்றிதழ்களே வழங்கப்பட்டு வந்தன.

சங்கீத, நடன பட்டங்கள் வழங்க அனுமதி கிடைத்ததைத் தொடர்ந்து இங்கு போதனாசிரியர்களாகக் கடமையாற்றிய 6 பேர் விரிவுரையாளர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

(த-3)

## தமிழ் விழா

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்ச் சங்கம் நடத்தும் தமிழ் விழா எதிர்வரும் புதன்கிழமை காலை 8-30 மணிக்கு கல்லூரி நினைவு மண்டபத்தில் நடைபெறும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளும் இவ்விழாவில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக துணைப்பொறுப்பாளர் ஆ. தங்கவேலன் (தேவர்), யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறையைச் சேர்ந்த எஸ். சிவலிங்கராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

(த-ம)

## தனியாரிடம் கையளிப்பு

அரசாங்க நிர்வாகத்தின் கீழுள்ள மேலும் 52 பெருந்தோட்டங்கள் விரைவில் தனியாரிடம் கையளிக்கப்படவுள்ளன.

இதுவரை அரசுக்குச்சொந்தமான 449 பெருந்தோட்டங்கள் தனியாரிடம் கையளிக்கப்பட்டுள்ளன. அவற்றை 22 தனியார் கம்பனிகள் பொறுப்பேற்று நிர்வகிக்கத் தொடங்கியுள்ளன.

இக்கம்பனிகளிடமே இந்த 52 தோட்டங்களும் கையளிக்கப்படவுள்ளன.

(த-ம)

## தமிழக அகதிகள் மீண்டும் பெயர்களைப் பதிய உத்தரவு

தமிழகத்தில் அகதி முகாம்களுக்கு வெளியேயுள்ள ஈழத் தமிழ் அகதிகள் எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னர் தமது பெயர்களைப் காவல் நிலையங்களில் பதிவுசெய்து கொள்ளுதல் வேண்டுமென தமிழக அரசு அறிவித்துள்ளது.

இவ்வாறு பதிவு செய்து கொள்ளாதவர்கள் கைது செய்யப்பட்டு உடனடியாகவே சிறப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவுசெய்யாதோர் இந்தியாவில் வசிப்பது சட்டவிரோதமென பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதால் இவர்கள் சிறப்பு முகாம்களிலிருந்து இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என்றும் தமிழக அரசு அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டு தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழர் அனைவரும் தம்மைப் பதிவு செய்து கொள்ளவேண்டுமென அறிவிக்கப்பட்டபோதிலும் முகாம்களுக்கு வெளியே வசிக்கும் பலர் இன்னமும் தம்மை பதிவுசெய்துகொள்ளவில்லை; என கண்டறியப்பட்டுள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

(த-ம)

## முல்லையில் தேங்காய் விலை வீழ்ச்சி!

புதுக்குடியிருப்பு, செப். 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் தேங்காயின் விலை பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தேங்காய் ஒன்று இரண்டரை ரூபாவுக்கு விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.


மூளாய்

கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்

வரையுள்ளது

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் 14-06-92 இல் நடைபெற இருந்து பிற்போடப்பட்ட வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 04-10-92 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் நடைபெறும். நிகழ்ச்சி நிரலில் முந்திய விடயங்களுடன் வைத்தியசாலையை கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம் பொறுப்பேற்பது சம்பந்தமான விடயமும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது;

ச. குலசூரியன், உப தலைவர்.

நா. வேலுப்பிள்ளை, செயலாளர்.

20-09-92 (இ-3412)



St, Patrick's College

Jaffna.

பிரவேச விண்ணப்பம் - 1993

பின்வரும் வகுப்புகளுக்கு மாத்திரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

முதலாம் ஆண்டு 01-02-87 — 31-08-88 க்குள் பிறந்திருக்க வேண்டும்.

நான்காம் ஆண்டு 1984 இல் பிறந்திருக்க வேண்டும்.

ஆறாம் ஆண்டு 1982 இல் பிறந்திருக்க வேண்டும்;

ஒன்பதாம் ஆண்டு 1979 இல் பிறந்திருக்க வேண்டும்.

★ விண்ணப்பப்பத்திரம் ரூபா 75-00 (பரீட்சைக் கட்டணம் உட்பட) 01-10-1992 தொடக்கம் 21-10-1992 வரை பாடசாலை நாட்களில் கல்லூரிக் காரியாலயத்தில் காலையில் நேரில் வந்து கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படும்.

★ நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 24-10-1992 ஆம் திகதிக்கு முன் கல்லூரிக் காரியாலயத்தில் காலை 9-00 — 12-00 மணிக்குள் நேரில் வந்து சமர்ப்பிக்கவும்.

★ பிரவேசப் பரீட்சை தினம் 07-11-1992 காலை 8 30 மணிக்கு ஆரம்பமாகும்.

★ 6 ஆம், 9 ஆம் வருட வகுப்புகளுக்கு நடத்தப்படும் பிரவேசப் பரீட்சையில் திறமை காண்பிக்கும் முதல் 10% மாணவர்களுக்கு வழமைபோல் யாழ். ஆயரது புலமைப் பரிசில் வழங்கப்படும்.

★ கத்தோலிக்க மாணவரெனின், அதை அத்தாட்சிப்படுத்தும் பங்குத் தந்தையின் கடிதமொன்றை விண்ணப்பப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

★ தபால் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்களும், குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது

- கல்லூரி அதிபர்.

(இ-3405)



ஓம் முருகா

கந்தன் கழலிணைகளில் பிறவாத பேரின்ப நிலையை எய்திய

முதலாம் ஆண்டு



மலர்வு: 03-10-1921

உதிர்வு: 09-10-1991

திதி: 27-09-1992



ஆறுமுகம் இராசையா சுவாமிஜி

(இளைப்பாறிய பொலீஸ் அதிகாரி)

திருக்குறள்: ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு! — திருவள்ளுவர்.

பொருள்: ஒழுக்கத்தில் நிலைத்து நின்று, பற்று விட்டு விட்டவர்களின் பெருமையைச் சிறந்ததாகப் போற்றிக் கூறுவதே நூல்களின் துணிவாகும்;

பொலீஸ் அதிகாரியாக அதிகாரம் செலுத்தினாலும் ஒழுக்கத்தில் நிலைத்து நின்று, பற்றற்றான் பற்றினைப் பற்றி வாழ்ந்து, அவனடி சார்ந்த,

அமரர் ஆறுமுகம் இராசையா

அவர்களுக்கு

வள்ளுவர் வாக்கு எத்துணை பொருத்தம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தெய்வீகஜீவ ஆச்சிரமம், சித்தன்கேணி.

குடும்பத்தினர்

இ. ஈஸ்வரகுமாரன்.

(22651)



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 10 — 09 — 1934



உதிர்வு: 09 — 10 — 1991

குலசேகரம்பிள்ளை நித்தியானந்தராஜா

திதி: 27 — 09 — 1992

புரட்டாதி மாதத்தில் அராலியில் உதித்தவனே
புரட்டாதி மாதமதில் வங்கியில் காலடி வைத்தவனே
புரட்டாதியில் திருநெல்வேலியில் மலர்ந்த மலரை
புரட்டாதியில் கைபிடித்த மருமகனே
புரட்டாதியில் மணர்வு, வாழ்வுடன் சாவையும்
புரட்டாதி அமாவாசை பிரதமையில் ஏற்றவனே
அரை நொடிதனும் நோயறியாய்
நித்தமும் ஆனந்தமாய் இருந்த ராஜாவே
நித்தியானந்த ராஜாவே
சம்பளை வங்கி சென்ற நீ வருவாய்
என்று காத்திருக்கையில் - நீ
கையெழுத்திட்ட மையின் ஈரம் காயுமுன்
எம்மை ஆழத் துயர் தனில் ஆழ்த்தி
நீ சென்று ஆண்டொன்று ஆனதுவோ!

உம் நினைவால் துயருறும்:

மனைவி, மகள்மார், சகோதரிமார்,
மைத்துனர், மைத்துனிமார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

''சபாரட்ணம் லொட்ஜ்''
பலாலி வீதி,
திருநெல்வேலி.

(2268)9


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாவித்த, நல்ல நிலையில் உள்ள செற்றிகள், கட்டில்கள், அலுமாரிகள், மேசைகள், புதிய வீடு கட்டுவதற்குத் தேவையான புதிய முதிரை, பாலை நிலைகள், யன்னல்கள், முதிரைப் பலகைகள், பாலை திராந்திகள் விற்பனைக்குண்டு. கு. வல்லிபுரம், இராமலிங்கம் வீதி. (முடமாவடி), திருநெல்வேலி கிழக்கு. [22648]

"மனி பேர்குசன்" மில்லர் மறு சீரமைக்கப்பட்டது விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்க: ஆ: இரட்ணராஜா, 21, கண்டி வீதி, நாவற்குழி. [22650]

பெற்றோலில் பாவித்த நிலையில் C.D 90 Benly Honda மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு; P. K. றஞ்சித், டச்சு றோட், உடுவில். (4980)

எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டி, பாடநெறி, பொதுவிவேகம், மொழித்திறன் ஆக்கம் T. லோகநாதன் B. A. எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். (சி 3388)

## உடன் விற்பனைக்கு

சிவப்பு- வெள்ளை சேவல் குஞ்சுகள் விலை ரூபா 20/-. மற்றும் வெள்ளை- கறுப்பு- பிறவுண் பேட்டுக் கோழிக் குஞ்சுகளுக்கும், புறொயிலர் குஞ்சுகளுக்கும், தொடர்பு; இல. 1, மத்திய சந்தை, மானிப்பாய். (5345)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohman, Hyline வெள்ளை, சிவப்பு, கறுப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவல், குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre, இல: 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி. நல்லூர். (22686)

## தேவை

எமது ஆங்கில மருந்து சாலைக்கு குறைந்தது க. பொ. த (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்த பெண் விற்பனையாளர் தேவை. பழகுபவர்களும் விரும்பப்படுவர். நேரில் தொடர்பு கொள்ளவும். சூரியா மருந்தகம், புத்தூர். [22672]

## BRIDE WANTED

Manager in a Luxury Hotel, Age 27, Aswini Nakshatram, Pavam 23 points, Citizen of U S A, wants a Fair Pleasing Educated Bride. Advertiser, 211/13T, off Temple Road, Jaffna [22637]

## மணமகன் தேவை

வயது 27, திருவோணம் நட்சத்திர மணமகளுக்கு வியாபாரம் அல்லது வெளிநாடு மணமகன் தேவை: உள்நாடும் விரும்பத்தக்கது. செ. விஜயரட்ணம், லட்சுமி திருமண சேவை, நவாலி கிழக்கு. (ஆனைக்கோட்டை மூத்தனார் கோவிலடி) [22620]

## மணமக்கள் தேவை

எங்களிடம் சகல தரங்களிலும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உண்டு. பதிவு செய்வதற்கு எதுவித கட்டணமும் அறவிடப்படமாட்டாது. சாதக விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். 211/13T செ. தில்லைச்சந்திரன் (நேரு) வீதி, ரெம்பிள் றோட் ஊடாக யாழ்ப்பாணம். [22638]

## நீம் சுகாதார தூபம்

இரவில் ஆழ்ந்த உறக்கம், மலர்ச்சியையும், சுறுசுறுப்பையும் தருகிறது "நீம் சுகாதார தூபம்" படுக்கை அறையில் புகைத்து நுளம்புத் தொல்லை இன்றி நிம்மதியாக நித்திரை செய்யுங்கள். சுக வாழ்வு உங்களதே. மில்க்வைற். [சி-3299]

## மணப்பெண் தேவை

யாழ். இந்து, 29 வயது, செவ்வாய்க் குற்றம் உள்ளவர் London இல் விசாவுடன் இருப்பவருக்கு அழகான, படித்த, ஆங்கில அறிவுள்ள உயரம் குறைந்த 26 வயதிற்கு உட்பட்ட செவ்வாய்க் குற்றம் உள்ள மணப்பெண் இலங்கையில் அல்லது London இல் தேவை, திருமணம் இலங்கையில் செய்து விசாவுடன் அழைத்துச் செல்லப்படுவார். சீதனம் தடையாய் இருக்காது. முழு விவரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். இல: 448, மே/பா, உதயன். (22685)

## துர்க்கா திருமண சேவை

31 8-92 தொடக்கம் துர்க்கா திருமணசேவை, சிவசக்தி ஸ்ரோர்ஸ் இல 194, நாவலர் றோட், யாழ்ப்பாணம். சகலரும் மேற்கூறிய முகவரிக்கு திங்கள், புதன் தொடர்பு கொள்ளவும். [5337]

## FIRST AID

First aid Pharmacy கற்றுக் கொடுக்கப்படும். O/L, A/L படித்த பெண்களுக்கு மட்டும். ஆரம்பம்: 28 9 92 மாலை 4-30க்கு. இடம்: துவாரகை சின்னமணி வீதி, உரும்பராய் தெற்கு. நிர்வாகி: றதினி. (22688)

## கல்வி

G. C. E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலத்தில் விசேட சித்திக்கும் கற்பிக்கப்பட்டு Section & Portion Revison உடன் past Papers Practice உம் அளிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, கண்டிக்குளி. [22675]

## O/L-92

கணிதம் விஞ்ஞானம்
தமிழ் சமூகக்கல்வி
ஆங்கிலம் சமயம்
வர்த்தகம் விவசாயம்
மனைப்பொருளியல்
சித்திரம் நடனம்
சங்கீதம் நெசவு
ஆகிய பாடங்களுக்கான
4 ஆவது
பயிற்சிப் பரீட்சை
27-09-1992
இந் நிறுவனங்களில்
நடத்தப்படும்.

- ★ BOND — யாழ்ப்பாணம்
- ★ SELIN — இருபாலை
- ★ PEARL — நீர்வேலி
- ★ KUGAN — ஆவரங்கால்
- ★ BRILLIANT — தென்மராட்சி
- ★ VINYLS — சுன்னாகம்
- ★ VINAYAHAR — மானிப்பாய்
- ★ Y. M. C. A. — பருத்தித்துறை
- ★ SATHAPONS — அல்வாய்

●● இந் நிறுவனங்களில் கற்கின்ற கற்காத அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.

●● விண்ணப்பங்கள் பெற விரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் தொடர்பு கொள்ளவும்.

விவரங்கள்:
Examination Unit
BOND INSTITUTES
யாழ்ப்பாணம்.
(இ-3410)

## O/L கணிதம்

Distinction பெறுபேறுடைய 30 வருட அனுபவமுள்ள B Sc., (Cey.) ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி, [22673]

## தவறிவிட்டது

பாக்கியநாதன் சின்னத்தங்கச்சி ஆகிய நான் கொழும்பிலிருந்து கிளாலி பாதையூடாக யாழ்ப்பாணம் வரும் போது அன்புராசா, சின்னத்தங்கச்சி (இல. 405801817 V) ஆகிய இருவரது தேசிய அடையாள அட்டையடங்கிய சிறிய பையொன்று தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் சுன்னாகம் மத்திய சந்தைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [4978]

726591245 V இலக்க அடையாள அட்டை 24 - 09 - 1992 அன்று திருநெல்வேலி அம்மன் கோவிலுக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 97, வலாவி வீதி, கந்தர்மடம் என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும். சன்மானம் வழங்கப்படும். [22677]

## பாரதிதாசன்

கல்வி நிறுவனம்
(BECON)

பேராதனைப் பல்கலைக் கழக வெளி நிலைப் பரீட்சை.

**G.A.Q. 93**
April

★ பொருளியல்
S. வரதராஜன்
B. A. (Hons)

சனி
ஞாயிறு 4-15 p m.
விலைக்கோட்பாடு
சனி
ஞாயிறு 5-15 p m.
உற்பத்திச், செலவுக் கோட்பாடுகள்

ஆரம்பம்:
03 - 10 - 1992
சனி

(இ-3523)

## ஆண்டு 5 - 1993

(ஆண்டு - 4 1992)
(புலமைப் பரிசில் Aug 93)

மேற்படி பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சைகள் மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் இந்நிறுவனங்களில் நடத்தப்படும்.

முதலாவது
பயிற்சிப் பரீட்சை
27 - 09 - 1992

- Bond — யாழ்ப்பாணம்
- Selin — இருபாலை
- Pearl — நீர்வேலி
- Kugan — ஆவரங்கால்
- Satha Pons — அல்வாய்
- Y.M.C.A. — பருத்தித்துறை
- Brilliant — சாவகச்சேரி
- Vinyls — சுன்னாகம்
- Paarathy — சித்தன்கேணி
- Lukky — கட்டுடை
- Bitsmans — மானிப்பாய்
- Vinayahar — ஆனைக்கோட்டை
- Keen — திருநெல்வேலி
- Osslo — கச்சேரியடி

விவரங்களுக்கு:
Examination Unit,
BOND
INSTITUTES,
யாழ்ப்பாணம்.
[இ-3411]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
03 — 04 — 1951

○○○

உதிர்வு:
19 — 09 — 1990

### நடராசா ஞானசேகரம்

(கொண்டா)
திதி: 27 — 09 — 1992

ஈராண்டு சென்றதையா!
ஆறாத்துயர் அகலவில்லை
அணைத்து எம்மை ஆட்கொண்ட
அந்த நினை அழியவில்லை
அப்பா என்றுமை மழைத்த
அந்த நாள் இனி வருமோ!

நின் பிரிவால் நினைந்துருகும்;
மனைவி, மக்கள்.

அரியாலை கிழக்கு.
யாழ்ப்பாணம்.
[22686]

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 17 — 04 — 1929

உதிர்வு: 19 — 09 — 1990

அமரர்

### சின்னத்தம்பி இராசரெத்தினம்

(உரிமையாளர் S V.S கொம்பனி, கொழும்பு)
திதி: 27 — 09 — 1992

எங்கள் குடும்பக் குலவிளக்காய்!
திருவுருவாய் - அன்புச் சுடராய்!
அன்பின் பிறப்பிடமாய் வாழ்ந்த
அன்புத் தெய்வமே! எங்களை
ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு
எங்கு தான் சென்றீர்கள்!
ஆண்டு இரண்டு போனாலும் ஆறாது
எங்கள் துயரம்;

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர்கள்.

117, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.
[22687]

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 15 — 07 — 1906

உதிர்வு: 30 — 09 — 1989

அமரர்

### சடையர் சண்முகநாதன்

திதி: 27 — 09 — 1992

பாசமலரே பண்பின் உறைவிடமே
குடும்பச்சுடரே ஒளிவிளக்கே
அன்புருவான அருமை முத்தே
நல்லவராக வல்லவராக - எம்மை
வாழ வைத்த தெய்வமே - மூன்றாண்டு
கடந்தன எங்கள் துயரநிலை மாறவில்லை;
உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்;

அன்பு மனைவி,
மக்கள், மருமகன்.

"டெய்சி ஹவுஸ்"
உடுவில்;
[22688]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# இப்போதாவது விழித்தார்களே..!

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் ஏற்றுமதிக்குக் குந்தகம் ஏற்படாமல் இருப்பதற்காக அரசாங்கம் அவசரகாலச்சட்ட விதிகளை அமுல் செய்திருக்கிறது.

சட்ட விதிகள் மூலம் ஏற்றுமதி சம்பந்தமான எழுத்துச் சுதந்திரம், சுவரொட்டிகள், விளம்பரங்கள், விளம்பர ஒலியங்கள் மூலமான எண்ண வெளிப்பாட்டுச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

இந்தத் தடைகளை எதிர்த்துக் கொழும்பில் கண்டன இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

ஜே. ஆரின் அரசாங்கம் நீண்டகாலமாக அவசரகாலச் சட்ட விதிகளின் கவசத்துடனேயே 'வாழ்ந்தது'. பிரேமதாசா அரசும் அவ்விடயத்தில் பின்நிற்கவில்லை. வடக்கு-கிழக்குப் போரைக் காரணம் காட்டி கடந்த இரண்டரை வருடங்களாக வெகு சுலபமாக, அவசரகாலச்சட்டத்தின் உதவியுடன் காலத்தைக் கழிக்கிறது; பதவியைக் கொண்டாடிக் களிக்கிறது. ஆகையால் ஏற்றுமதித் துறைக்கு ஊக்குவிப்பு என்ற பெயரில் கருத்துச் சுதந்திரத்தை — எழுந்து, பேச்சு சுதந்திரங்களை — கட்டிப் போட்டிருப்பது ஒன்றும் ஆச்சரியப்படக் கூடியதல்ல!

சனநாயகக் கட்டமைப்பின் மூலவேரான கருத்துச் சுதந்திரத்தை அறுத்து, சர்வாதிகாரத்தை மறைமுகமாகத் தோற்றுவிப்பதற்கான முயற்சிகள் தெற்கில் சமீபகாலமாக அதிகரித்துவருகின்றன. கருத்துச் சுதந்திரத்தின் முதல் தர ஊடகமாக விளங்கும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு அங்கு ஆபத்துத் தோன்றியுள்ளது. பத்திரிகைகள் மீது நேரடியான தடையை விதிப்பதற்கு முன்னதாக பத்திரிகையாளர்களை தாக்குவது, மிரட்டுவது, அவர்களின் தொழில் உபகரணங்களை சேதமாக்குவது போன்ற அராஜகங்கள் தலையெடுத்துள்ளன.

இவை குறித்துத் தென்னிலங்கைப் பத்திரிகைகள் பெரிதாக எடுத்துக் காட்டுகின்றன; கண்டிக்கின்றன; எதிர்ப்பியக்கங்களைத் தோற்றுவிக்கின்றன.

வடக்கு - கிழக்கு மக்களின் தகவல் அறியும் உரிமையைத் தடை செய்யும் விதத்தில் தமிழ்ப் பகுதிகளுக்கு பத்திரிகை அச்சுத்தாள், மற்றும் அச்சக சாதனங்கள், உதிரிப் பாகங்கள், உபகரணங்களை கொண்டு வருவதற்கு இரண்டரை வருடங்களுக்கு முன்னரே தடை விதிக்கப்பட்டது. அது குறித்து கொழும்புப் பத்திரிகையாளர் எவரும் கவலைப் பட்டதில்லை. பத்திரிகைகளும் பொருட்படுத்தியதும் இல்லை.

தமிழ் மக்களின் குரலாக நின்று அவர்களின் கருத்தைப் பிரதிபலித்ததற்குப் பழிவாங்கும் விதத்தில் சரியாக இரண்டு வருடங்களுக்கு முன்னர், — 1990 செப்டம்பர் 27 ஆம் திகதியன்று — உதயன் மீது குண்டு வீசப்பட்டது. அவ்வேளை தென்னிலங்கைப் பத்திரிகைகள் எதுவும் உதட்டைத் தானும் உயர்த்தவில்லை. அரசாங்கம் தமிழர் மீது கட்டவிழ்த்துவிட்ட அக்கிரமங்களை எடுத்துக்கூறியதற்காக, அநியாயங்களைச் சுட்டிக் காட்டியதற்காக, உதயனை அரச படையினர் பழிவாங்கினர் என்பது குறித்து மனித உரிமை இயக்கங்கள் எதுவும் மூச்சும் விட்டதில்லை.

இப்போது தெற்கில் பத்திரிகைச் சுதந்திரத்துக்கு — கருத்துச் சுதந்திரத்துக்கு — ஆபத்து வரப்போகிறது என்றதும் வெள்ளம் வருமுன்பே அணை போட முந்துகிறார்கள். தமிழர்களுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் சகல சட்டங்களும் வட்டம் போட்டுச் சுழன்று சென்று சிங்களவர்களையும் தாக்குவது தான் இயல்பாகி விட்டது. அந்த வகைகள் பத்திரிகைகளுக்கு எதிரான அம்பும் இப்போது தென்னிலங்கையரைத் தேடிச் சென்று பாய்ந்துள்ளது.

யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகளை இயங்கச் செய்யாமல் தடுப்பதற்கு அரசு தடைகளை விதித்தபோதும், குண்டு வீசித் தாக்குமளவிற்கு பழிவாங்கிய போதும் கண்ணை மூடிக் கொண்டிருந்த தென்னிலங்கைப் பத்திரிகைகளும், பத்திரிகையாளர்களும் 'தங்களுக்குத் தலையிடி வந்தபோது விழித்துக்கொண்டார்களே! அதாவது போதும் என்று நாம் இரக்கப்படுகிறோம்!

# வடமராட்சியில் உணர்ச்சி ததும்ப கடல் அலையாகத் திரண்ட மக்கள்

## முத்துச் சப்பறத்தில் திலீபனின் ஊர்தி

வடமராட்சி, செப். 27

தியாகி திலீபனின் நினைவு நாளை வடமராட்சி மக்கள் உணர்ச்சி ததும்ப, மிகுந்த எழுச்சியுடன் கொண்டாடினர். பிரதான உண்ணாவிரதம் நடந்த மாலி சந்தியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் அலை மோதினர். உண்ணாவிரதக் கொட்டகைகள் நிறைந்து வழிந்தன.

தியாகி திலீபனின் திருவுருவப் படம் அல்வாயில் இருந்து முத்துச்சப்பறத்தில் மேளதாளத்துடன் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. அதே போல பல இடங்களில் இருந்து அலங்கார ஊர்திகள் பிரதான இடத்தை வந்து சேர்ந்தன.

நேற்றைய உண்ணாவிரதத்தின்போது மாலி சந்தியில் அமைக்கப்பட்ட கொட்டகைகள் நிறைந்து வழிந்து, வீதியெங்கும் மக்கள் சமுத்திரம் காணப்பட்டது.

கரவெட்டி வட்ட அவை, பருத்தித்துறை வட்ட அவை, வடமராட்சி கிழக்கு வட்ட அவை, வடமராட்சி கிழக்கு - கடற்புலிகள், வடமராட்சி வடக்கு - கடற்புலிகள், பாடசாலை மாணவர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் போக்குவரத்துச் சங்கங்கள், தனியார் கல்வி நிலையங்கள், விடுதலைப் புலிகள் அரசியற்றுறைப் பிரிவு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம், சனசமூக நிலையங்கள் வர்த்தகர்கள், மீனவர் சங்கங்கள், ஆகியவற்றைச் சேர்ந்த பொதுமக்கள் அணி அணியாக இந் நினைவு நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

### முத்துச்சப்பறம்

அல்வாய் முத்துமாரி அம்மன் சனசமூக நிலைய இந்து வாலிபர் சங்க ஏற்பாட்டில் திலீபனின் திருவுருவப் படம் முத்துச் சப்பறத்தில் மேளதாள வாத்தியங்களுடன் பவனியாக எடுத்து வரப்பட்டது.

சரணவாய் வடக்கு, சரணவாய் கிற்றூர் பிரிவு மக்கள் செல்வபுரத்திலிருந்து பாண்ட் வாத்திய இசையுடன் திலீபனின் படத்தை ஊர்தியில் எடுத்து வந்தனர்.

கரவெட்டி பகுதி மக்கள் திலீபனின் திருவுருவத் தாங்கிய ஊர்தியுடன் மூத்த விநா ஊர் ஆலயத்திலிருந்து நீண்ட தூர பவனியுடன் வந்தடைந்தனர்.

அச்சுவேலியிலிருந்தும் திலீபனின் ஊர்தி, தேர் பவனியாக வந்தது.

பருத்தித்துறை அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பா. மைந்தமிழன் தலைமையில் நேற்றுக்காலை எட்டு மணிக்கு உண்ணாவிரதம் ஆரம்பமானது. வடமராட்சி மண் மீட்பு நிதிப் பொறுப்பாளர் திரு. டேவிட் மங்கள விளக்கு ஏற்றி வைத்தார்; தமிழீழ விடுதலைப் புலிகள் தேசியக் கொடியை வடமராட்சித் தளபதி திரு. செல்வம் ஏற்றி வைத்தார்; வடமராட்சி மாணவர் அமைப்பு உதவிப் பொறுப்பாளர் திரு. ஜீவன், திலீபன் திருவுருவுக்கு மலரஞ்சலி செலுத்தினார். இரண்டு நிமிட மௌன அஞ்சலியை அடுத்து வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார்.

உண்ணாவிரதத்தின்போது வடமராட்சி விடுதலைப் புலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உற்சவம்

வல்வை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 5 ஆம் திகதி காலை இரதோற்சவமும், 6 ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

## 2 ராணுவத்தினர் உயிரிழப்பு

புதுடில்லி, செப். 27

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற மோதல் ஒன்றில் இராணுவத்தினர் இருவர் உயிரிழந்தனர் என்று இந்திய வானொலி தெரிவித்தது. (உ-10)

## தமிழீழ எல்லைப் பகுதிகளில்

# எமது தேசியக் கொடி பறக்கும் வரை ஆயுதங்களை கைவிடமாட்டோம்

## நல்லூர் கூட்டத்தில் மறவன் சூளுரை

யாழ்ப்பாணம், செப். 27

''தமிழீழம் என்ற இலக்கை நோக்கி ஆயுதப் போரில் ஈடுபட்டு வந்த எம்மை ஆயுதங்களைக் கைவிட நிர்ப்பந்தித்தது இந்தியா.

தியாகி திலீபன் மூலமாக நாம் நடத்திய சாத்வீகப் போரை மதிக்க மறுத்த இந்தியாவின் அரக்கத்தனமே மீண்டும் எம்மை ஆயுதம் ஏந்த நிர்ப்பந்தித்தது. தமிழீழ எல்லைகளில் தமிழீழத் தேசியக் கொடி பறக்கும் நாள் வரை நாம் ஆயுதங்களைக் கீழே வைக்க மாட்டோம்.''

— இப்படிச் சூளுரைத்தார் கடற் புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் மறவன் (ஸ்ரனி மாஸ்டர்).

நல்லூர் ஆலய முன்றலில் நேற்று மாலை நடந்த கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

வங்காள தேசத்தில் என்ன கொடுமைகளை இந்தியா செய்ததோ அதே கொடுமைகளை ஈழத்தில் செய்யும் என்று தீர்க்கதரிசனத்துடன் கூறினார் திலீபன்.

என் இறப்பின் பின்னர் தமிழீழம் மலரும் என்று திடநம்பிக்கையுடன் கூறியவர் அவர்.

தமிழீழப் போராட்டத்தில் புதிய உத்தியை — சாத்வீக வழியில் — மேற்கொள்ளலாம் என்பதை செயல் வழியில் காட்டியவர்.

இந்தியாவிடம் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு, அனாதைகளாக நின்ற எமக்கு சாத்வீகப் போராட்டத்தின் தத்துவத்தை விளக்கியவர் அவர்.

தமிழ் மக்களின் உரிமைகளை இந்தியா பெற்றுத் தரும்; எமக்கு கிடைக்கவைத்தர இந்தியா வந்து விட்டது — என்று மக்கள் நினைத்ததற்கு எதிர்மாறாக இந்தியா செயற்பட்டது. அதனால்தான் மக்களைக் காக்க மீண்டும் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டோம்.

எமது மக்கள் அனைவரும் பொங்கி எழும் போது தமிழீழம் மலரும் என்பதில் ஐயமில்லை — என்றார்.

[உ-3-111-126-162]

# சென்னையில் பிரேமதாஸா ஒரு மணி நேரம் தங்கினார்

கொழும்பு, செப். 27

சார்க் நாடுகளான பாகிஸ்தான், நேபாளம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி பிரேமதாஸா கொழும்பு திரும்பும் வழியில் — நேற்று முன்தினம் இரவு — சென்னைக்குச் சென்றார்.

சென்னை விமான நிலையத்தில் சுமார் ஒரு மணி நேரம் அவர் தங்கியிருந்தார்.

சென்னை விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு. வெங்கட்ராமன் மற்றும் மாநில அரசின் உயர் அதிகாரிகள் திரு. பிரேமதாஸாவை வரவேற்றனர். [உ-ம-10]

## காரைநகரில் ஷெல், பீரங்கி தாக்குதல்கள்

சுழிபுரம், செப். 27

காரைநகரில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா படையினர் நேற்றுப்பகல் ஒரு மணியளவில் பொன்னாலைப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர். பொன்னாலை குடியேற்றப் பிரதேசத்தில் ஷெல் குண்டுகள் விழுந்து வெடித்தன.

நேற்றுக்காலை 6.30 மணியளவிலும் மூளாய், பொன்னாலை பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தப் பட்டது. (ஒ-28-17)

## ஏழாலை வாசி சூடுபட்டு காயம்

யாழ்ப்பாணம், செப். 27

கட்டுவன் பகுதியில் இருந்து இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுக்கு ஏழாலை மத்தியைச் சேர்ந்த ஒருவர் காயமடைந்தார்.

இராசேந்திரம் தயாபரன் (17 வயது) என்ற இளைஞர் ஏழாலையிலுள்ள தமது வீட்டின் முன் நேற்றிரவு உரையாடிக் கொண்டிருந்த போது சூட்டுக்கு இலக்கானார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-15)

# திலீபன் கனவை நனவாக்க ஒன்றாக அணிதிரள்வோம்!

## செல்வி ஜெயா அறைகூவல்

''போராளிகளின் தியாகம் குறித்து மேடைகளில் பேசுவதும், அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்துவதும், மட்டும் பயன் தரப்போவதில்லை. அந்த மாவீரர்களின் எண்ணத்தை — பாதச்சுவடுகளை பின்பற்றிச் சென்று விடுதலை பெறுவதற்காக ஓரணியில் சகலரும் இணைவதே அவர்களுக்கு நாம் செய்யும் அஞ்சலியாகும்.''

—இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி. ஜெயா.

நல்லூரில் நேற்று மாலை நடந்த தியாகி திலீபனின் நினைவுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

எமது போராட்டத்தை நாமே எமது காலில் நின்று நடத்தவேண்டும். மற்றவரில் தங்கியிருக்கக் கூடாது என்ற பாடத்தை எமக்குப் புகட்டியவர் தியாகி திலீபன்.

இந்திய அரசு எமக்கு உதவ வந்து விட்டது என்று எமது மக்கள் நினைத்தபோது, திலீபன் தனது உண்ணாவிரதம் மூலம் இந்தியாவின் உண்மைச் சொருபத்தை — சுயபடத்தை — உலகுக்கு வெளிக்காட்டினார்.

மக்கள் எழுச்சியுடன் எமது போராட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று திலீபன் கண்ட கனவை, நனவாக்க சகல மக்களும் ஓரணியில் அணிதிரள்வோம். — என்றார்.

[உ-3-111-126-162]

## பேச்சுவார்த்தை மூலமே தீர்வு

புதுடில்லி, செப். 27

''இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைப் மூலம்தான் தீர்வு காண முடியும்.''

— இவ்வாறு நேபாள தலைநகர் காத்மண்டுவில் செய்தியாளர் மத்தியில் பேசிய ஸ்ரீலங்கா ஜனாதிபதி திரு. பிரேமதாஸா தெரிவித்தார் என்று இந்திய வானொலி அறிவித்தது. [உ-10]

# துன்ப, துயரங்கள் மத்தியிலும் உணர்வுடன் மக்கள் பங்களிப்பு

## இளம்பரிதி பெருமிதம்

''எமது மக்களை சொல்லொணாத் துன்பம், பொருளாதாரச் சுமை, இராணுவ அச்சுறுத்தல்கள் ஆகியன சூழ்ந்து நிற்கின்றன. இந்த நிலையிலும் மக்கள் திலீபனின் நினைவு நிகழ்வில் எழுச்சியுடனும், உணர்வு பூர்வமாகவும் பங்கேற்றுள்ளனர்.''

இவ்வாறு பெருமிதத்துடன் கூறினார் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல், நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி.

நல்லூரில் நேற்று நடந்த தியாகி திலீபன் நினைவுக் கூட்டத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

போராட்டத்தை முன்னெடுக்கும் போராளிகளின் வேகத்தையும், அவர்களின் உணர்வையும் மக்களின் பங்களிப்பு அதிகரிக்கச்செய்துள்ளது: மக்களின் ஆதரவுதான் போராட்ட வளர்ச்சியையும், விடுதலையையும் தரும்.

அந்நிய நாட்டின் உதவியை நாடுவதன் மூலம் எமது உரிமைகளைப் பெறமுடியாது என்பதை இந்தியாவின் செயற்பாடு எமக்குக் காட்டியது. அந்நிய நாட்டின் எண்ணத்துக்கு நாம் பலியாகக் கூடாது. நாமே நமது போராட்டத்தை நடத்தி எமது இறைமையை நிலைநாட்டி, சுதந்திரத்தைப் பெற வேண்டும்.

தர்மத்தின் அடிப்படையில் நடக்கும் எமது போர் தோற்காது. நிச்சயம் வெற்றியையே தரும்.

ஸ்ரீலங்கா அரசின் தாக்குதல்களால் எமது போராட்ட வளர்ச்சியடையவில்லை; முன்னேறிச் செல்கிறது.

ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராக நாம் நடத்தி வரும் போரால் சிங்கள இராணுவம் பலவீனப் பட்டுள்ளது. அரசியல், இராணுவ ரீதியில் அரசு ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது.

இந்தியப் படைக்கு எதிராக மக்கள் படை திரண்டது போல, சிங்களப் படைக்கு எதிராகப் போரிட மக்கள் படை திரளவேண்டும். இது தான் வரலாற்றுக் கடமையாகும் — என்றார்.

தீவக அரசியல், நிர்வாகப் பொறுப்பாளர் திரு. சேரலாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் மாவீரர் பணிமனையின் பொறுப்பாளர் பொன் தியாகம், கவிஞர் வாஞ்சிநாதன், கடற்புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவன் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

[உ-3-111-126-162]

## இன்றைய கிரிக்கெட் ஆட்டம்

யாழ்ப்பாணம், செப். 27

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்க அணிக்கும் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான, மட்டுப் படுத்தப்பட்ட ஐம்பது ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டம் இன்று நடைபெறும்.

இன்று காலை 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இந்த ஆட்டம் ஆரம்பமாகும்.

கடந்த கிரிக்கெட் பருவகாலத்தில் பல வெற்றிச் சாதனைகளை நிலை நாட்டிய யாழ். சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து, யாழ்ப்பாணத்தின் பிரபல கிரிக்கெட் வீரர்களைக் கொண்ட யாழ். மத்தியஸ்தர்கள் அணி மோதுவது யாழ். கிரிக்கெட் ரசிகர்களுக்கு பெரு விருந்தாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 27

நவராத்திரி விரதம் இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகிறது. யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள அனேகமான ஆலயங்களில், குறிப்பாக அம்மன் கோவில்களில் கும்பம் வைத்து இன்று நவராத்திரி விரதம் ஆரம்பமாகிறது.

சில ஆலயங்களில் நேற்றே கும்பம் வைத்துப் பூசைகள் ஆரம்பிக்கப்பட்டன.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில், ஏழாலை, களபாவோடை வசந்தநாக பூஷணி அம்மன் ஆலயம், சாவகச்சேரி ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம், உரும்பராய் ஞான வைரவ சுவாமி கோவில், கொக்குவில் கிழக்கு பொற்பதி விநாயகர் ஆலயம் ஆகிய கோவில்களில் நவராத்திரியை ஒட்டி விசேட சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கங்களும் நடைபெறவுள்ளன.

[அ-30-28]

## உதைபந்தாட்டப்

யாழ்ப்பாணம், செப். 27

சேண்டாங்கள் வடக்கு மத்திய கிராம முன்னேற்ற சங்கம் நடத்தும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை ஆரம்பமாகின்றது.

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நாளை மாலை 4 30 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது ஆட்டத்தில் ஞானகலா அணியை எதிர்த்து சென் மேரிஸ் 'பி' அணி மோதும்.

[உ]

## ஆலடியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரண்கள் மீது அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இத்தாக்குதலின் போது 14 5 மி மீ ரக, இரு கடுகுழல் கொண்ட நவீனரகத் துப்பாக்கி ஒன்றை விடுதலைப் புலிகள் கைப்பற்றி அழித்தனர். படையினரின் பெருமளவு ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றினர், பல காவலரண்களும் தகர்க்கப்பட்டன.

அதிகாலை நடத்தப்பட்ட இத் தாக்குதலில் ஐந்து படையினர் உயிரிழந்ததாக இராணுவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய வானொலி அறிவித்தது; மேலும் பல படையினர் இத் தாக்குதலில் காயமுற்றனர்.

பாதுகாப்பு படையினரின் முன்னணி நிலைமைச் சீர்குலைக்க நடத்தப்பட்ட இத் தாக்குதலின் போது சங்குப்பிட்டிப் பகுதியில் கடற்புலிகளின் சுழியோடிகள் பங்குபற்றியதாக உத்தியோகபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி லங்காபுவத் அறிவித்தது.

[உ-ஓ-3-5-10-15-17 117 126-162-165]

# முல்லை - மன்னார் வீதிகளை இணைக்கும்வேலை ஆரம்பம்

முறிகண்டி, செப். 27

கிளிநொச்சி மாவட்டத்தில் மன்னார் வீதியையும், முல்லைத்தீவு வீதியையும் இணைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்பொருட்டு பூங்காவனம் சந்தியில் இருந்து பல்லவராயன்கட்டு வரையிலான 32 மைல் நீள வீதி தற்பொழுது திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது.

இத் திருத்த வேலைகளுக்கு அவசர புனர்நிர்மாண புனருத்தாரண திட்டத்தின் கீழ் 1992ஆம் ஆண்டிற்கென எட்டு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதே வேளை —

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த பல வருடங்களாக திருத்தப்படாமல் இருந்த பல வீதிகள் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இரணைமடு பிரதேசத்தில் எமேசன் வீதி, இல் வீதி என்பன கிரவல் கற்கள் போடப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளன.

இவ் வீதித் திருத்த வேலைகளில் வீதி அபிவிருத்தித் திணைக்களமும், நீர்ப்பாசன திணைக்களமும் ஈடுபட்டு வருகின்றன.

[த-ம-97]

## ஆசைவார்த்தை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களின் சொத்துக்களை அழிக்கும் — இதுதான் வரலாற்றுப் பாடம்.

47 ஆம் ஆண்டுமுதல் தமிழ் தலைவர்களுக்கு மந்திரிபதவி வழங்குவதும், தமிழர் பிரச்சினைக்கு ஒப்பந்தம் செய்வதும் வழக்கமாயிருந்தது.

ஸ்ரீலங்கா அரசின் ஆசை வார்த்தைகளில் சில தமிழ்க் குழுக்கள் மயங்கிக் கிடக்கலாம்; ஆனால் புலிகளை இந்த வகையில் எவருமே ஏமாற்ற முடியாது.

### பிரேமாவின் ஆட்சி

இன்று தமிழீழ போராட்டத்தைக் காட்டித்தான் பிரேமதாஸா ஆட்சி செலுத்துகிறார்.

சிங்கள இராணுவத்தை ஏவி, இடத்தைப் பிடித்து விட்டோம்; புலிகளை அழித்து விட்டோம் என்று கூறி சிங்கள மக்களை ஏமாற்றி ஆட்சி செய்கிறார் பிரேமதாஸா.

பிரேமதாஸாவின் பொய்யுரையை மக்கள் இப்போது உணர ஆரம்பித்துவிட்டனர்.

பிரேமா ஆட்சிநடத்தும் தந்திரம் விரைவில் அம்பலத்துக்கு வரும்; இராணுவம் அடித்து விரட்டப்படும்.

ஸ்ரீலங்கா அரசு விமானங்களையும், டாங்கிகளையும் வாங்கலாம், அதற்கு எதிராகப் போராட நாம் தயாராகவுள்ளோம். ஆயுதங்கள் மட்டும் போராட்டத்தின் வெற்றியை நிர்ணயிக்கப் போவதில்லை. எமது மன உறுதியில் தான் போராட்டம் தங்கியுள்ளது.

இந்த மன உறுதியுடன்தான் எமது போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அதில் முக்கிய பங்கு திலீபனுடையது.

தனது சாத்வீகப் போராட்டம் மூலம் மன உறுதியை வெளிப்படுத்தியவன் திலீபன்.

தமிழகத்தில் இன்று அரசுக்கு எதிராகப் போராடும் அளவுக்கு மக்கள் தயாராகிவிட்டனர்.

இலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட சட்டங்கள் இன்று சிங்கள மக்களுக்கு எதிராக பிரயோகிக்கப்படுகின்றன.

— என்றார்.

[உ-3-111-126-162]

## ஹெலி சூடு!

யாழ்ப்பாணம், செப். 27

அரியாலை கிழக்கு, பூம்புகார் கடலோர பகுதியை நேற்றுக்காலை 6.00 மணியளவில் ஹெலி ஒன்று பலதடவைகள் வட்டமிட்டு கலிபர் தாக்குதலை நடத்தியது.

(ஓ 17)

## திலீபன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதி இளங்குமரன் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். தீவகத் தளபதி செழியன் உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்தார்.

வலிகாமம் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் இருந்து வந்த மக்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். அரச, தனியார், வர்த்தக, கூட்டுறவுத் துறைகளைச் சேர்ந்த பணியாளர்களும் பெரும் எண்ணிக்கையில் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். பாடசாலை மாணவ மாணவிகள், பெண்கள், பெரியோர்கள் என்று எல்லா வயதினரும் உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டனர். விடுதலைப் புலிகள் போராளிகளும் தமிழீழ காவல்துறையினரும் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

### வெயிலில்

பந்தலுக்கு வெளியேயும் ஏராளமான மக்கள் சுட்டெரிக்கும் வெயிலில் அமர்ந்து உண்ணாவிரதம் இருந்தனர்.

தியாகி திலீபனின் உயிர் பிரிந்த முற்பகல் 10.48 மணிக்கு நல்லூர் ஆலய மணிகள் ஒலித்தன. அதனுடன் பாண்ட் வாத்திய ஒலியும் வானைப் பிளக்க, உண்ணாவிரதம் இருந்த மக்கள் மௌன அஞ்சலி செய்தனர்.

### மலரஞ்சலி

மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் விடுதலைப் புலிகள் பிரமுகர் பரா ஆகியோர் தியாகி திலீபனின் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை சூடி அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து மக்கள் வரிசையாகச் சென்று திலீபனுக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

எழுச்சி நாளை முன்னிட்டு தீவக மக்களின் ஏற்பாட்டில் தியாகி திலீபனின் உருவப் படத்தைத் தாங்கிய அலங்கரிக்கப்பட்ட ஊர்தி ஒன்று யாழ். பஸ் நிலைய ஞான வைரவர் சுவாமி கோவிலில் இருந்து நல்லூருக்கு இழுத்து வரப்பட்டது. அந்த ஊர்தியுடன் பொன்னுத்துரை கிருபாகரனின் பறவைக் காவடியும் வந்தது. இவற்றின் பின்னால் ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள்கள் ஊர்வலமாக வந்தன.

ஊரெழுவில் இருந்தும் பறவைக் காவடி ஒன்று நல்லூரை வந்தடைந்தது.

பிற்பகல் 4 மணிக்கு தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் உண்ணாவிரதிகளுக்கு நீராகாரம் வழங்கி, உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

எழுச்சி நாளை முன்னிட்டு குடாநாடெங்கும் நேற்று எழில் மயமாக இருந்தது. வீதிகள், ஒழுங்கைகள், கட்டடங்கள் எல்லாம் மஞ்சள் சிவப்புக் கொடிகளால் வண்ணமுற அலங்கரிக்கப்பட்டிருந்தன. திலீபன் நினைவுப் பந்தல்களில் மக்கள் தியாகியின் திருவுருவப் படத்துக்கு மலரஞ்சலி செலுத்தினர்.

குருநகர்ப் பகுதியில் பல வர்ண புதிய மீன்பிடி வலைகளாலும் வீதிகள் அலங்கரிக்கப்பட்டிருந்ததாக எமது செய்தியாளர் அறிவிக்கிறார்.

திலீபன் உயிர் நீத்த மு. ப. 10 48 மணிக்கு [illegible] ஒலிகளும் [illegible]

[அ-3-15-17-162-51-111]

## வடமராட்சியில்...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் பிரமுகர்களின் உரைகள், பாடசாலை மாணவர்களின் நாடகம், கவியரங்கு, பாட்டு, மற்றும் புரட்சிப் பாடல்கள் கவிதைகள் ஒலித்தன. வீடியோ படக்காட்சி மூலம் திலீபனின் உண்ணாவிரத நிகழ்வுகள் காட்டப்பட்டன.

பிற்பகல் 4 மணிக்கு நினைவுரைகள் ஆரம்பமாகின. வடமராட்சி மகளிர் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி தலைமையில் யாழ். மாவட்ட கடற்புலிகள் உதவிப் பொறுப்பாளர் திரு. புலியரசன், யாழ். மாவட்ட மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி ஆர்த்தி, வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அரசண்ணா ஆகியோர் உரை நிகழ்த்தினர். நினைவுரைகளைத் தொடர்ந்து உண்ணாவிரதம் முடித்து வைக்கப்பட்டது. இரவு கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. [அ-165]


இணுவில்

ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆலய

**நவராத்திரி விழா**

**வாணி விழா இசை அரங்கம்**

இன்று முதல் 05—10—92 வரை

தினசரி மாலை 6 30 முதல் 8 30 வரை

**இன்றைய இசை அரங்கு**

பாட்டு:- திரு. பொன். சுந்தரலிங்கம்

வயலின்:- திரு ஆர் ராதாகிருஷ்ணன்

மிருதங்கம்:- திரு. எஸ் மகேந்திரன்

கெஞ்சிரா:- திரு. எஸ். துரைராஜா

(22698)



**வீர அஞ்சலி**

**இராமையா (லெப். கலையன்பன்)**

நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் தேவஸ்தான பிரதம குரு காலஞ்சென்ற சிவஸ்ரீ தியாகராஜக் குருக்கள் — இராஜலட்சுமி தம்பதிகளின் இளைய புத்திரன் இராமையா (லெப். கலையன்பன்) அவர்கள் 26-09-92 (நேற்று) சனிக்கிழமை அதிகாலை பூநகரியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடி மோதலில் வீர சொர்க்கம் அடைந்துவிட்டார்.

அன்னார் நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் தேவஸ்தான பிரதம குருவும், தமிழ், இந்து நாகரீக ஆசிரியருமான சோமாஸ்கந்தராஜாக் குருக்கள், விஜயலட்சுமி, வேதையா (ஜேர்மனி), வியோமகேசன் (கற்கோவளம் முத்துமாரி தேவஸ்தான அர்ச்சகர்), அமிர்தகடேசர் (கரவெட்டி கிழக்கு தாலையப்புலம் பத்திரகாளி பிரதம அர்ச்சகர்) ஆகியோரின் அன்புத் தம்பியும், வரலட்சுமியின் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மாணவி) அன்பு அண்ணாவும், புவனேஸ்வரி, நகு ஆகியோரின் அன்பு மைத்துனரும், சோமசுந்தரம் (அதிபர் தை. ம. வி.), அகிலாண்டேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும், அன்பழகன் (வீரவேங்கை - ராசித்), தமிழழகன் (நிலவண்ணன் - போராளி), அறிவழகன் (அன்பரசன் - போராளி) ஆகியோரின் உடன் பிறவா சகோதரருமாவார்.

அன்னாரது பூதவுடல் வீர அஞ்சலிக்காக அன்னாரது இல்லத்தில் வைக்கப்பட்டு 27-09-92 (இன்று) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில், நெல்லண்டை சனசமூகநிலையம், தும்பளை கிழக்கு சனசமூக நிலையம் ஆகியவற்றில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் வடமராட்சி மாவீரர் மயானத்துக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்;

க. சோமசுந்தரம் (அதிபர் தை. ம. வி.)

சிவஸ்ரீ தி. சோமாஸ்கந்தராஜாக் குருக்களும், சகோதரர்களும்,

இலட்சுமணன் தோட்டம்,

தும்பளை,

பருத்தித்துறை.

[22696]



நெல்லியடி

வதிரி அம்மன் கோவில்

**14 ஆம் திருவிழா**

27 9 - 92 ஞாயிறு இரவு நிகழ்ச்சிகள்

விசேட மேளக் கச்சேரி

இன்னிசை:- ''சங்கீத பூஷணம்'' பொன் சுந்தரலிங்கம்

வில்லிசை:- ஸ்ரீதேவி வில்லிசைக் குழு

''கலைமாமணி'' S. S சர்மா

மெல்லிசை:- ஈழ நல்லூர் அண்ணா இசைக் குழு

**அனைவரும் வருக !!**

[22694]

— உபயகாரர்.



இணுவில் சிவகாமி அம்மன் கோவில்

**அடியார்களுக்கு ஓர் அறிவித்தல்**

இன்றைய போர்க்கால சூழ்நிலையில் எமது ஆலய நிர்வாகம் எவ்வித திருப்பணிகளையும் மேற்கொள்ளவில்லை பொதுமக்களிடம் நிதி சேகரிக்கவும் இல்லை. வேறு சபை நிறுவனங்களுக்கோ, தனிநபர்களுக்கோ நிதி சேகரிக்க அனுமதியும் வழங்கவில்லை. எனவே ஆலய நிர்வாகத்தின் அனுமதியின்றி நடைபெறும் எவ்வித அலுவல்களுக்கும் நாம் பொறுப்பாளிகள் அல்லர் என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

[22695]

— ஆலய தர்மகர்த்தாக்கள்


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவானந்தவல்லி அம்மாள் சங்கரப்பிள்ளை

சுழிபுரத்தைச் சேர்ந்த காலஞ் சென்ற பிரபல சட்டத்தரணி தாமோதரம்பிள்ளை சங்கரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவி சிவானந்தவல்லி அம்மாள் அவர்கள் (விவாகப் பதிவாளர், யாழ்ப்பாணம்) 26-09-1992 அன்று காலமானார். இவர் சிவகுமாரன் (லண்டன்), ஜயகுமாரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-09-1992) 10 மணியளவில் சுழிபுரம் தாமோதரவாசா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக சுழிபுரம் திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்;

ந. வைத்திலிங்கம்.

சுழிபுரம்.

[22692]

### மிக்கேல்பிள்ளை பிரகாசம்

சில்லாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், 28/1, சோமசுந்தரம் ஒழுங்கை, கண்டுக்குளி - கச்சேரியடியில் வசித்தவருமான மிக்கேல்பிள்ளை பிரகாசம் 26 9-92 இல் காலமாகிவிட்டார்.

இவர் ஆக்கிநேஸ் (பொன்றோஸ்) இன் அன்புக் கணவரும், பசிந்தா, மணி, ஜீவா, கொன்சி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரனிஸ்லாஸ், இராசேந்திரம் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிறோயில், நெவில், வினோத் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27-9-92) பிற்பகல் 3 மணியளவில் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கண்டுக்குளி,

[22697]

தகவல் !

அ. இராசேந்திரம்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் [illegible] இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27-09-92 இல் [illegible] வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org